முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2021 யூலை

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2021-10-24
காலை
[08.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  - (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
    *விடையெழுத : 03 மணித்தியாலம்*
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  - (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*
  - (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  - (5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*
  - (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரலில்*** *தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*
  - (7) ***கணித அட்டவணை*** *வழங்கப்படும்.*
  - (8) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**வரையறுக்கப்பட்ட ரங்கா கம்பனி** கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக தொழிற்படு மூலதனச் சிரமங்களை எதிர்கொண்டுள்ளது. கீழ்வரும் தகவல்கள் 2021 மார்ச் 31 மற்றும் 2020 மார்ச் 31 ஆகிய திகதிகளில் / முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட ரங்கா கம்பனியின்** நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | 2020/21 (ரூபா) | 2019/20 (ரூபா) |
|---|---:|---:|
| விற்பனைகள் | 11,600,000 | 15,200,000 |
| தொக்கு | 1,965,000 | 1,515,000 |
| வியாபார வருமதிகள் | 3,505,000 | 2,295,000 |

2020/21 ஆம் ஆண்டிற்கான மொத்த இலாப எல்லை 25% ஆக இருந்ததுடன் 2020/21 ஆம் ஆண்டிற்கான வியாபார சென்மதிகள் தீர்ப்பனவுக் காலம் 78 நாட்களாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

சகல விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் ஆண்டொன்றில் உள்ள நாள்களின் எண்ணிக்கை 365 ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2020/21 ஆம் ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட ரங்கா கம்பனியின்** தொழிற்படு மூலதனச் சுழற்சிக் காலத்தைக் (Working Capital Cycle) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட யுனிக்கியு கம்பனி** பல்வேறு பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்கிறது. இது அண்மையில் செயலாற்றுகை அளவீட்டுக் கருவியொன்றாக சமப்படுத்தப்பட்ட புள்ளி அட்டையை (Balanced Score Card) அறிமுகப்படுத்தியது :

2021 யூன் மற்றும் யூலை மாதங்களுக்கான கீழ்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன :

| | **2021 யூன்** | **2021 யூலை** |
|---|---|---|
| வருமானம் (ரூபா) | 4,500,000 | 5,760,000 |
| மொத்த இலாபம் (ரூபா) | 1,800,000 | 2,419,200 |
| விற்பனை (அலகுகளில்) | | |
| **பொருள் 1** | 6,000 | 5,800 |
| **பொருள் 2 (புதிய)** | 800 | 1,900 |
| உற்பத்தி (அலகுகளில்) | | |
| **பொருள் 1** | 6,250 | 6,400 |
| **பொருள் 2 (புதிய)** | 1,300 | 2,200 |
| வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை | 5,200 | 5,798 |
| வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 25 | 20 |

***நீங்கள் செய்யவேண்டியவை :***

(a) மேற்படி தகவல்களின் அடிப்படையில் சமப்படுத்தப்பட்ட புள்ளி அட்டையின் நிதி முன்னோக்குக்கான (financial perspective) செயலாற்றுகை அளவீடுகளுக்கு இரண்டு (02) உதாரணங்களையும் சமப்படுத்தப்பட்ட புள்ளி அட்டையின் வாடிக்கையாளர் முன்னோக்குக்கான செயலாற்றுகை அளவீட்டிற்கு ஒரு (01) உதாரணத்தையும் **அடையாளங் காண்க.** *(கணிப்பீடுகள் தேவையில்லை)* .

(03 புள்ளிகள்)

(b) சமப்படுத்தப்பட்ட புள்ளி அட்டையின் இரண்டு (02) பிரதிகூலங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட கென்டில்ஸ் கம்பனி** விசேட வகை மெழுகுதிரிகளைத் தயாரித்து விற்பனை செய்கிறது. இக்கம்பனியின் ஏடுகளிலிருந்து 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| அலகொன்றின் விற்பனை விலை | ரூபா 800/- |
| அலகொன்றின் நேர் மூலப்பொருள் | ரூபா 120/- |
| அலகொன்றின் நேர் கூலி | ரூபா 150/- |
| அலகொன்றின் மாறும் உற்பத்தி மேந்தலை | ரூபா 30/- |
| 2020 ஏப்ரல் 01 இல் தொக்கு | 2,900 அலகுகள் |
| ஆண்டிற்கான உண்மையான உற்பத்தி | 15,500 அலகுகள் |
| ஆண்டிற்கான உண்மையான விற்பனை | 16,800 அலகுகள் |
| ஆண்டிற்கான பாதிடப்பட்ட உற்பத்தி | 16,500 அலகுகள் |

நிலையான மேந்தலைகள் கீழ்வருமாறு :

| | **பாதிடப்பட்டது (ரூபா)** | **உண்மையானது (ரூபா)** |
|---|---|---|
| உற்பத்தி மேந்தலை | 2,310,000 | 2,240,000 |
| நிருவாக மற்றும் விநியோக மேந்தலைகள் | 600,000 | 600,000 |

***நீங்கள் செய்யவேண்டியது :***

எல்லைக் கிரயமிடல் முறையைப் பயன்படுத்தி, 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட பீற்றா கம்பனி** பல்வேறு மின் உபகரணங்களிலும் பயன்படுத்தப்படுகின்ற மோட்டர்களைத் தயாரித்து, விற்பனை செய்கிறது. இந்த மோட்டர்கள், உள்ளகரீதியாக தயாரிக்கப்பட்ட சில பாகங்களையும் வழங்குநர்களிடமிருந்து வாங்கப்பட்ட சில பாகங்களையும் உள்ளடக்கியுள்ளன. **பாகம் N** இனைத் தயாரிப்பதை வெளிமூலமிடுவதன் (வெளியாருக்கு வழங்குவதன்) சாத்தியத்தன்மை பற்றி **வரையறுக்கப்பட்ட பீற்றா கம்பனி** மதிப்பீடு செய்கிறது. **பாகம் N** தொடர்பில் பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன :

(1) வெளிமூலமிடலின் அலகொன்றிற்கான கிரயம் ரூபா 2,500/- ஆக இருக்கும்.

(2) கம்பனி அதனை உள்ளகரீதியாகத் தயாரிப்பதற்கு தற்போது கீழ்வரும் செலவுகளைச் செய்கிறது.

| | **அலகொன்றின் கிரயம் (ரூபா)** |
|---|---|
| நேர் மூலப்பொருள் | 1,430 |
| நேர் கூலி | 610 |
| மாறும் மேந்தலைகள் | 320 |
| நிலையான உற்பத்தி மேந்தலைகள் | 430 |
| | **2,790** |

(3) மேலே குறிப்பிடப்பட்ட நிலையான உற்பத்தி மேந்தலைகள், ஆண்டொன்றிற்கு 100,000 என்ற பாதிடப்பட்ட அலகுகளின் அடிப்படையில் உறிஞ்சப்படுகின்றன.

(4) உற்பத்தி வெளிமூலமிடப்படுமாயின், 65% மான நிலையான உற்பத்தி மேந்தலைகளைத் தவிர்க்க முடியும் என்பதுடன் சில கூலிகளையும் விலக்கிவைக்க முடியும். விலக்கி வைக்கப்படும் கூலிகளுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவாக ரூபா 36 மில்லியனைச் செலுத்த வேண்டியிருக்கும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

கம்பனி **பாகம் N** ஐத் தயாரிக்க வெளிமூலமிட வேண்டுமா என்பதை **மதிப்பிடுக.**
*(உங்கள் விடைக்கு ஆதரவான கணிப்பீடுகளைத் தருக.)* (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட கைவினைப் பொருள் கம்பனியானது** சுற்றுலாப் பயணிகளுக்கு மட்பாண்டக் கைவினைப் பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்கிறது.

இரண்டு அளவுகளில் தயாரிக்கப்பட்ட பொருள்களின் 2021 டிசெம்பர் மாதத்திற்கான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | **ரூபா (அலகொன்று)** | |
|---|---|---|
| | **சிறிய அளவு** | **பெரிய அளவு** |
| **நேர் மூலப்பொருள் :** | | |
| மூலப்பொருள் **AB** (கிலோகிராமொன்று ரூபா 150) | 225 | 450 |
| மூலப்பொருள் **CD** (கிலோகிராமொன்று ரூபா 800) | 400 | 800 |
| திறமையான கூலி (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 400) | 600 | 1,000 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 300 | 400 |
| விற்பனை விலை | 2,800 | 4,500 |
| கேள்வி (அலகுகளில்) | 1,500 | 600 |

மாதாந்த நிலையான மேந்தலை ரூபா 650,000/-.

2021 டிசெம்பர் மாதத்தில் கம்பனியில் இருந்த வளங்கள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| மூலப்பொருள் **AB** | 4,200 கிலோகிராம் |
| மூலப்பொருள் **CD** | 1,100 கிலோகிராம் |
| திறமையான கூலி | 4,400 மணித்தியாலங்கள் |

***நீங்கள் செய்யவேண்டியவை :***

(a) வரையறைக் காரணி (காரணிகளை) (limiting factor/s) ***அடையாளங் காண்க.*** (04 புள்ளிகள்)

(b) இனங்காணப்பட்ட வரையறைக் காரணி/ காரணிகளின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையை (optimal production mix) ***அடையாளங் காண்க.*** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

***வரையறுக்கப்பட்ட அல்ரா கம்பனி*** ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கான பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்கிறது.

***வரையறுக்கப்பட்ட அல்ரா கம்பனி*** தொடர்பான கீழ்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன :

(1) 2021 நவெம்பர் மாதம் தொடக்கம் 2022 மார்ச் மாதம் வரையான விற்பனைப் பாதீடு கீழே தரப்பட்டுள்ளது: *(ரூபா.)*

| | **2021 நவெம்பர்** | **2021 டிசெம்பர்** | **2022 சனவரி** | **2022 பெப்ரவரி** | **2022 மார்ச்** |
|---|---|---|---|---|---|
| விற்பனை (ரூபா) | 3,000,000 | 3,200,000 | 2,500,000 | 2,200,000 | 2,100,000 |

(2) 20% மான விற்பனைகள் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. விற்பனையானது காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படுமிடத்து, 10% கழிவு (discount) வழங்கப்படுகிறது. மீதி 80% ஆன விற்பனைகள் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் பெறுவனவுகள் அடுத்துவரும் மாதத்தில் பெறப்படுகின்றன.

(3) கம்பனியானது தனது மூலப் பொருள்களை கடன் அடிப்படையில் தொகையளவில் (bulk) கொள்வனவு செய்வதுடன் அதற்கு வழங்குநர்களால் இரண்டு மாத கடன் காலம் (credit period) வழங்கப்படுகிறது. மூலப் பொருளின் கிரயம் மாதாந்த விற்பனைக் கிரயத்தின் 75% ஆக இருக்கிறது. மீதி 25% ஆன கிரயங்கள் அவை செலவு செய்யப்படும் மாதத்திலேயே தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. மொத்த இலாப எல்லை 60% ஆக இருப்பதுடன் கம்பனியானது ஒவ்வொரு மாத இறுதியிலும் எந்தவொரு இருப்புகளையும் பேணுவதில்லை.

(4) பணித்தொகுதியினருக்கான சம்பளங்கள் ஒவ்வொரு மாதத்தின் இறுதி நாளிலும் செலுத்தப்படுவதுடன் மாதம் ஒன்றிற்கான பணித்தொகுதியினரின் சம்பளம் ரூபா 1,500,000/- ஆகும்.

(5) ஏனைய நிருவாகச் செலவினங்கள் மாதமொன்றுக்கு ரூபா 400,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், அவை செலவு செய்யப்படும் மாதத்திற்கு அடுத்துவரும் மாதத்தில் செலுத்தப்படுகின்றன.

(6) கம்பனியானது ஒவ்வொரு மாத இறுதியிலும் ஆகக்குறைந்தது ரூபா 1,000,000/- காசு மீதியைப் பேணுவதற்கு எதிர்பார்க்கிறது. ஏதாவது பற்றாக்குறை காணப்படுமாயின், மாதத்தின் இறுதி நாளில் குறுங்காலக் கடன் ஒன்றைப் பெறுவதன் மூலம் அது நிவர்த்தி செய்யப்படுகிறது. குறுங்காலக் கடன் மீதான வட்டி வீதம் ஆண்டிற்கு 12% ஆகும். கடன் மீதான வட்டி மாதாந்த அடிப்படையில் செலுத்தப்படுவதுடன் மூலதன மீள்கொடுப்பனவு 2022 ஏப்ரல் மாதம் தொடக்கம் மேற்கொள்ளப்படும்.

(7) 2022 சனவரி 01 இல் ஆரம்ப காசு மீதி ரூபா 1,124,000/- ஆக இருக்கும்.

***நீங்கள் செய்யவேண்டியது :***

2022 சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 07

கீழ்வரும் தகவல்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்ட கம்பனியான **A PLC** தொடர்பானவை ஆகும் :

(1) **A PLC** ஆனது 150 மில்லியன் சாதாரண வாக்குரிமைப் பங்குகளை வழங்கலில் கொண்டிருப்பதுடன், இந்தப் பங்கொன்று ரூபா 18/- என்ற சந்தை விலையில் தற்போது வர்த்தகம் (trading) செய்யப்படுகிறது. கம்பனி பங்கொன்றுக்கு ரூபா 2.70 பங்கிலாபமாகச் செலுத்துகிறது.

(2) கம்பனியானது பங்கொன்று ரூபா 10/- விலையில் வழங்கப்பட்ட 35 மில்லியன் மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளையும் வழங்கலில் கொண்டிருக்கிறது. இந்தப் பங்கொன்றின் தற்போதைய சந்தை விலை ரூபா 12.50 ஆக இருப்பதுடன் முன்னுரிமைப் பங்கொன்றின் வருடாந்தப் பங்கிலாபம் ரூபா 1/- ஆகும்.

(3) கம்பனியானது ஆண்டிற்கு 11% என்ற கூப்பன் வீதமொன்றுடன் தனிச்சமொன்று ரூபா 100/- விலையில் 5 மில்லியன் மீட்கத்தக்க தனிச்சங்களை வழங்கியுள்ளது. தனிச்சம் ஒன்றின் தற்போதைய சந்தை விலை ரூபா 95/- ஆக இருப்பதுடன் தனிச்சங்கள் 5 ஆண்டுகளில் மீட்கத்தக்கதாக உள்ளன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(b) மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(c) மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயம் (03 புள்ளிகள்)

(d) சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி, நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் (WACC) (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட நியூ கம்பனி** ஆனது **பொருள் M** இனைத் தயாரித்து விற்பனை செய்கிறது. 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிச் செயலாற்றுகை கீழே தரப்பட்டுள்ளது :

| **2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உண்மைத் தகவல்கள்** | **ரூபா** |
|---|---|
| விற்பனைகள் | 10,055,250 |
| நேர் பொருள் : | |
| **பொருள் X** (4,250 கிலோகிராம்) | 2,796,500 |
| **பொருள் Y** (17,985 கிலோகிராம்) | 3,920,730 |
| நேர் கூலி | 1,240,250 |
| மாறும் மேந்தலைகள் | 235,950 |
| நிலையான மேந்தலைகள் | 1,423,250 |

ஆண்டிற்கான உண்மையான உற்பத்தி / விற்பனை – 8,175 அலகுகள்.

கீழ்வரும் தகவல்கள் **பொருள் M** இன் நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ஒரு அலகிற்கு (ரூபா)** |
|---|---|
| **நேர் மூலப்பொருள்:** | |
| **மூலப்பொருள் X** (கிலோகிராம் ஒன்று ரூபா 600/- விலையில் 0.5 கிலோகிராம்) | 300 |
| **மூலப்பொருள் Y** (கிலோகிராம் ஒன்று ரூபா 240/- விலையில் 2 கிலோகிராம்) | 480 |
| நேர் கூலி (மணித்தியாலம் ஒன்றுக்கு ரூபா 450/- வீதம் 20 நிமிடங்கள்) | 150 |
| மாறும் மேந்தலைகள் (மணித்தியாலம் ஒன்றுக்கு ரூபா 75/- வீதம்) | 25 |
| **மொத்த மாறும் கிரயம்** | **955** |
| விற்பனை விலை | 1,250 |
| **பங்களிப்பு** | **295** |

வருடாந்த பாதிடப்பட்ட விற்பனை 8,250 அலகுகளாக இருப்பதுடன், வருடாந்த பாதிடப்பட்ட நிலையான மேந்தலை ரூபா 2,950,000/- ஆகவும் இருக்கிறது.

முகாமைக் கணக்காளர் மேற்படி ஆண்டிற்காக கீழ்வரும் முரண்களைக் கணிப்பிட்டுள்ளார் :

| **முரண்** | **பெறுமதி (ரூபா)** | **நிலை** |
|---|---|---|
| நேர் கூலி வினைத்திறன் முரண் | 135,000 | பாதகம் |
| நேர் கூலி வீத முரண் | 121,000 | சாதகம் |
| மாறும் மேந்தலை செலவின முரண் | 9,075 | பாதகம் |
| மாறும் மேந்தலை வினைத்திறன் முரண் | 22,500 | பாதகம் |
| விற்பனை எல்லைக் கனவளவு முரண் | 22,125 | பாதகம் |
| விற்பனை விலை முரண் | 163,500 | பாதகம் |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கீழ்வரும் முரண்களைக் **கணிக்குக** :

(i) நேர் பொருள் விலை முரண் (Direct Material Price Variance) (02 புள்ளிகள்)

(ii) நேர் பொருள் கலவை முரண் (Direct Material Mix Variance) (04 புள்ளிகள்)

(iii) நேர் பொருள் விளைவு முரண் (Direct Material Yield Variance) (04 புள்ளிகள்)

(b) பாதிடப்பட்ட பங்களிப்பை உண்மையான பங்களிப்புடன் இணக்கம் செய்வதற்காக தொழிற்பாட்டுக் கூற்றொன்றைத் (operating statement) **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 09

**வரையறுக்கப்பட்ட மெக்ஸ் கம்பனி** ரூபா 55 மில்லியன் கிரயத்தில் ஒரு புதிய வகை பொதி செய்யும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வது பற்றி மதிப்பீடு செய்கிறது.

இந்த இயந்திரத்தின் ஆயுட் காலத்தில் கீழ்வரும் விற்பனைகளும் மொத்த இலாப எல்லைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன :

| ஆண்டு | விற்பனை (ரூபா) | GP எல்லை |
|---|---|---|
| 1 | 88,000,000 | 25 % |
| 2 | 80,000,000 | 28 % |
| 3 | 66,000,000 | 32 % |
| 4 | 55,000,000 | 35 % |
| 5 | 36,000,000 | 36 % |

இயந்திரம் கொள்வனவு செய்யப்படுமாயின், இயந்திரத்தின் ஆயுட்காலம் முழுமைக்குமாக இயந்திரப் பெறுமதியின் 6% இல் இயந்திரத்தின் ஆயுட்காலத்தை உள்ளடக்கிய பராமரிப்பு ஒப்பந்தமொன்றினுள் கம்பனி நுழைதல் வேண்டும். இந்தத் தொகை இயந்திரத்தைக் கொள்வனவு செய்யும் நேரத்தில் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் அது கணக்கீட்டு நோக்கத்திற்காக இயந்திரத்தின் ஆயுட்காலம் ஈறாக கழித்துத் தீர்க்கப்படும் (amortized).

மேலே குறிப்பிடப்பட்ட வருடாந்தம் கழித்துத் தீர்க்கப்படும் பராமரிப்புக் கிரயம் மற்றும் இயந்திரத்தின் கணக்கீட்டுத் தேய்மானம் ஆகியவற்றை உள்ளடக்கிய வருடாந்த நிலையான நிருவாக மேந்தலை ஆண்டொன்றிற்கு ரூபா 15,600,000/- ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இயந்திரம் 5 ஆண்டுகள் பயன்தரும் ஆயுட் காலம் ஈறாக நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படும் அதே வேளை ஆண்டிற்கு 25% இல் மூலதனப் படி (capital allowances) கோரப்பட முடியும்.

கம்பனி ஆண்டொன்றிற்கு 24% இல் வருமான வரி செலுத்துவதுடன் அந்தந்த ஆண்டிலேயே அது செலுத்தப்பட வேண்டும்.

**வரையறுக்கப்பட்ட மெக்ஸ் கம்பனியின்** மூலதனக் கிரயம் ஆண்டிற்கு 14 % ஆக இருக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) முதலீட்டின் நிகர இற்றைப் பெறுமதியைக் (NPV) **கணிக்குக.** (13 புள்ளிகள்)

(b) மேலே கணிப்பிடப்பட்ட NPV இன் அடிப்படையில் மேற்படி முதலீட்டின் சாத்தியத்தன்மையை (viability) **மதிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 10

(A) **வரையறுக்கப்பட்ட ஜிகா கம்பனி** பல தொடர்ச்சியான செயன்முறைகள் ஊடாக **பொருள் H** இனைத் தயாரித்து விற்பனை செய்கிறது.

**செயன்முறை II** பற்றிய 2021 யூன் மாதத்திற்கான கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன **:**

| | |
|---|---|
| **செயன்முறை I** இலிருந்து மாற்றப்பட்ட உள்ளீடு (6,500 கிலோகிராம்) | ரூபா 2,271,100/- |
| நேர் கூலி | ரூபா 944,840/- |
| மாறும் மேந்தலைகள் | ரூபா 416,520/- |
| வெளியீடு | 5,440 கிலோகிராம் |
| சாதாரண இழப்பு | செயன்முறை I இலிருந்து மாற்றப்பட்ட உள்ளீட்டின் 5%. இதனை கிலோகிராம் ஒன்று ரூபா 110/- என்ற விலையில் விற்பனை செய்ய முடியும். |

மாத இறுதியில், கீழ்வரும் பூர்த்தி மட்டங்களுடன் இறுதிப் புத்துருவாகும் வேலைகளின் 780 கிலோகிராம் காணப்பட்டது :

| | | |
|---|---|---|
| **செயன்முறை I** இலிருந்து மாற்றப்பட்ட உள்ளீடு | : | 100% |
| நேர் கூலி | : | 75% |
| மாறும் மேந்தலைகள் | : | 50% |

**நீங்கள் செய்யவேண்டியது :**

சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றையும் **செயன்முறை II** கணக்கையும் **தயாரிக்குக.**

(13 புள்ளிகள்)

(B) **AB கம்பனி, பொருள் A** மற்றும் **பொருள் B** ஆகியவற்றைத் தயாரிக்கிறது.
இரண்டு பொருள்களுக்குமான நியமக் கிரய அட்டைகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப் பட்டுள்ளன :

| | **பொருள் A (ரூபா / அலகொன்றுக்கு)** | **பொருள் B (ரூபா / அலகொன்றுக்கு)** |
|---|---|---|
| விற்பனை விலை | 200 | 300 |
| நேர் பொருள் | 70 | 60 |
| நேர் கூலி | 30 | 65 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 20 | 55 |
| நிலையான உற்பத்தி மேந்தலைகள் | 20 | 25 |

2021 டிசெம்பர் மாதத்திற்கான, கம்பனியின் பாதிடப்பட்ட உற்பத்தி / விற்பனையானது **பொருள் A** இன் 300,000 அலகுகளும் **பொருள் B** இன் 150,000 அலகுகளும் ஆகும். கம்பனி 2021 டிசெம்பர் மாதத்திற்காக ரூபா 425,000/- பெறுமதியான நிலையான உற்பத்தியற்ற மேந்தலைகளையும் பாதீடு செய்துள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) இலாப நட்டமற்ற விற்பனையைப் (Break Even Sales) பெறுமதியில் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) இணைந்த இலாபக் கனவளவு (PV) விகிதத்தைக் (Combined Profit Volume Ratio) **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |